தினப்புயல்
PIN news
THINAPPUYAL
திநப்புயல்
REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06

## கிழக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்த 10 வருடங்களில் விரிவான வேலைத்திட்டம்




மட்டக்களப்பு செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்தின் 149 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் நேற்று (08) காலை கலந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. மட்டக்களப்பு ஒரு அதிர்ஷ்டமான மாவட்டம். சுமார் 150 ஆண்டு கால வரலாற்றைக் கொண்ட இரண்டு பாடசாலைகள் இங்குள்ளன. நான் நேற்று புனித மைக்கல் கல்லூரியின் நூற்றி ஐம்பதாவது ஆண்டு விழாவில் கலந்து கொண்டேன். இன்று செங்கலடி மத்திய மகா வித்தியாலயத்திற்கு வருகை தந்துள்ளேன்.

மறைந்த அமைச்சர் கே.டபிள்யூ.தேவநாயகன் இந்தப் பாடசாலையில் கற்றவர். ஜே.ஆர்.ஜெயவர்தனவின் அமைச்சரவையில் நான் அவருடன் இணைந்து பணியாற்றியுள்ளேன். இப்பாடசாலையில் செங்கலடி. கல்குடா பிரதேசத்தைச் சேர்ந்த பிள்ளைகள் உயர்தரக் கல்வியைப் பெற முடிந்தது. ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கையை பார்க்கும் போது அதனைப் புரிந்து கொள்ள முடியும். மேலும். சில மாணவர்கள் கணக்கியல் உள்ளிட்ட ஏனைய பாடநெறிகளை படிக்கின்றனர். மேலும். இந்த மாணவர்கள் தொழில்நுட்பத் துறையில் சிறந்த பெறுபேறுகளை வெளிப்படுத்தியுள்ளனர்.

ஆனால் இந்தப் பாடசாலையில் சிறந்த தொழில்நுட்ப ஆய்வகம் இல்லை. எனவே. இப்பாடசாலைக்கு உயர்மட்ட தொழில்நுட்ப ஆய்வு கூடத்தை வழங்குவதற்கு நான் நடவடிக்கை எடுப்பேன். இந்த பாடசாலையை முன்னேற்ற வேண்டும். இங்கு மாணவர்கள் கல்வியில் மட்டுமின்றி நடனத்திலும் சிறந்து விளங்குகின்றனர். இன்று செங்கலடி பிரதேசம் அபிவிருத்தியடைந்துள்ளது. இப்பகுதிகள் மேலும் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். மட்டக்களப்பு மாவட்டத்தில் உருவான அமைச்சர்களான தேவநாயகன் மற்றும் ராஜதுரை ஆகியோரின் விருப்பமும் அதுவே. அந்த ஆசையை நிறைவேற்றுவோம்.

மட்டக்களப்பு மாவட்டம் கல்வியினால் அபிவிருத்தியடைந்துள்ளது. ஆனால் பொருளாதாரம் இன்னும் வலுவாக இல்லை. அடுத்த 10 வருட திட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டம் பொருளாதார ரீதியாக பலப்படுத்த எதிர்பார்க்கிறோம். மகாவலி திட்டத்தின் ஊடாக இந்தப் பிரதேசங்களை அபிவிருத்தி செய்ய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன திட்டமிட்டிருந்தார். ஆனால் யுத்தம் காரணமாக அதைச் செய்ய முடியவில்லை. தற்போது திருகோணமலை மாவட்டத்தை இந்தியாவுடன் இணைந்து பாரிய நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

கட்டுநாயக்க பியகமவில் 400 ஏக்கர் முதலீட்டு வலயம் உள்ளது. ஆனால் திருகோணமலை 1000 ஏக்கர் முதலீட்டு வலயத்தை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. திருகோணமலை துறைமுகம் முறையாக அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். அதற்கான திட்டத்தை சுபானா ஜூரான் சிங்கப்பூர் நிறுவனம் தயாரித்துள்ளது. அதனை முன்னெடுக்க எதிர்பார்க்கிறோம். அப்போது திருகோணமலை பாரிய நகரமாக உருவாகும். மேலும் இது பொருளாதார ரீதியாக வலுவான மையமாக மாறும். மறுபுறம். விவசாயத்தை மேம்படுத்த வேண்டும். மகாவலி திட்டத்தில் விடுபட்ட மகாவலி ஏ மற்றும் பீ வலயங்களை அபிவிருத்தி செய்து மட்டக்களப்பு மாவட்டத்தை முன்னேற்ற திட்டமிடப்பட்டுள்ளது. மேலும். இந்தப் பகுதியில் நவீன விவசாயத் துறையை உருவாக்க உத்தேசித்துள்ளோம். இந்த மாகாணம் தற்போது அரிசியில் தன்னிறைவு பெற்றுள்ளது. புதிய பயிர்களை அறிமுகப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கால்நடை வளர்ப்பிக்காக புதிய கால்நடைகளை வழங்குவதன் மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கு இலங்கையில் உள்ள அம்பேவெல போன்ற உள்நாட்டு நிறுவனங்களின் ஆதரவையும் வெளிநாட்டு நிறுவனங்களின் ஆதரவையும் பெற எதிர்பார்க்கிறோம். கிழக்கு மாகாணத்தில் சுற்றுலாத்துறையை அபிவிருத்தி செய்வதற்காக நிலாவெளி முதல் பானம வரையிலான சுற்றுலா வலயமொன்றை உருவாக்க திட்டமிடப்பட்டுள்ளது. காடு மற்றும் ஏரி பகுதிகள் சுற்றுலாத்துறைக்காக மேம்படுத்தப்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது. எதிர்வரும் 10 வருடங்களில் திருகோணமலை நகரின் அபிவிருத்தி. மகாவலி ஏ மற்றும் பீ பிரிவுகளின் அபிவிருத்தி மற்றும் விவசாய நவீனமயமாக்கல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். இதன் மூலம் இந்த மாகாணங்களில் புதிய பொருளாதாரம் உருவாக்கப்படுகிறது. தற்போதைய பிரச்சினையான பால் பண்ணையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான். இராஜாங்க அமைச்சர் எஸ். வியாளேந்திரன். செங்கலடி மத்திய மகா வித்தியாலய அதிபர் தேவதாசன் குகதாசன் மற்றும் ஆசிரியர்கள். மாணவர்கள் உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## போரை அறிவித்தது இஸ்ரேல்



இஸ்ரேலின் அமைச்சரவை அந்நாட்டில் போர் நிலையை அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. ஹமாஸ் தாக்குதலில் இஸ்ரேலில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 500ஐ தாண்டியதை அடுத்து இது நிகழ்ந்துள்ளது. இஸ்ரேல் மீது பாலஸ்தீன ஹமாஸ் போராளிகள் நடத்திய தொடர் தாக்குதல்களாலும். இஸ்ரேலின் எதிர் தாக்குதல்களாலும் இரு நாடுகளிலும் 800க்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளனர். சுமார் 100 இஸ்ரேலிய பொதுமக்கள் இன்னமும் ஹமாஸால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

காஸா பகுதியின் கட்டுப்பாட்டில் வைத்துள்ள ஹமாஸ் போராளிகள் நேற்று முன்தினம் (07) அதிகாலையில் இருந்து இஸ்ரேலிய எல்லைக்குள் நுழைந்து தாக்குதலை நடத்த ஆரம்பித்துள்ளனர். இஸ்ரேலின் டெல் அவிவ் உள்ளிட்ட முக்கிய நகரங்களை குறிவைத்து சுமார் 7.000 ஏவுகணை தாக்குதல்களுடன் தொடங்கிய இந்த தாக்குதலுக்கு அல்–அக்ஸா தாக்குதல் என்று பெயரிடப்பட்டது. கடந்த செப்டெம்பர் மாதம் பாலஸ்தீனியர்களின் புனித ஆலயமான அல் அக்ஸா மசூதியை இலக்கு வைத்து இஸ்ரேல் நடத்திய தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் இந்த தாக்குதல் நடத்தப்பட்டமையே இதற்குக் காரணம். தாக்குதலின் கீழ். ஹமாஸ் போராளிகள் இஸ்ரேலின் இறுக்கமான பாதுகாப்புகளை உடைத்து வான். கடல் மற்றும் தரை வழியாக நாட்டிற்குள் நுழைந்தனர். இரக்கமற்ற ஹமாஸ் தாக்குதலில் பொதுமக்கள் கொடூரமாக கொல்லப்பட்டனர்.

தற்போது கூட இஸ்ரேலில் 8 இடங்களில் ஹமாஸ் போராளிகளுக்கும் இஸ்ரேல் படைகளுக்கும் இடையே கடும் மோதல்கள் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. தற்போது ஹமாஸ் தாக்குதல்களால் கொல்லப்பட்ட இஸ்ரேலிய பொதுமக்கள் மற்றும் ராணுவ வீரர்களின் எண்ணிக்கை 500ஐ தாண்டியுள்ளது. பெண்கள் மற்றும் குழந்தைகள் உட்பட கிட்டத்தட்ட 100 இஸ்ரேலிய பொதுமக்கள் மற்றும் வீரர்கள் ஹமாஸால் பணயக் கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டுள்ளனர் என்பதை இஸ்ரேல் அதிகாரபூர்வமாக ஒப்புக் கொண்டுள்ளது. இஸ்ரேலின் கருத்துப்படி. மோதலில் கொல்லப்பட்ட ஹமாஸ் போராளிகளின் எண்ணிக்கை 400ஐ தாண்டியுள்ளது.

இதனிடையே பாலஸ்தீன தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் காசா பகுதியில் உள்ள 150 இலக்குகள் மீது பாரிய தாக்குதல்களை நடத்த இஸ்ரேல் நடவடிக்கை எடுத்திருந்தது. கடந்த 24 மணி நேரத்தில் காஸா மீதான இஸ்ரேலிய தாக்குதல்களில் 20 குழந்தைகள் உட்பட 300க்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளதுடன் சுமார் 2.000 பேர் காயமடைந்துள்ளனர். இதற்கிடையில். இதை கறுப்பு தினம் என்று குறிப்பிட்டுள்ள இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு. கடுமையான பதிலடியை எதிர்கொள்ள தயாராக இருக்க வேண்டும் என்று ஹமாஸ் அமைப்பை எச்சரித்துள்ளார். மேலும். லெபனானில் உள்ள ஹிஸ்புல்லா அமைப்பும் இஸ்ரேலை தாக்க ஆரம்பித்திருந்தது. அதன்படி லெபனான் மீது இஸ்ரேல் வான்வழித் தாக்குதல் நடத்தியது. இதற்கிடையில். தாக்குதல்களுக்கு ஈரானின் ஆதரவைப் பெற்றதாக ஹமாஸ் கூறுகிறது. மேலும் ஹமாஸ் தாக்குதல் தொடர்பாக ஈரான் நாடாளுமன்றத்தில் ஆதரவு தெரிவிக்கப்பட்டது.

1967–ம் ஆண்டு அரபு–இஸ்ரேல் போருக்குப் பிறகு இஸ்ரேலால் ஆக்கிரமிக்கப்பட்ட காஸா பகுதி. யாருக்குச் சொந்தம் என்ற பிரச்சினை காரணமாக. இஸ்ரேல் பாலஸ்தீனத்துக்கு மத்தியில் பல ஆண்டுகளாக சிக்கல் இருந்து வருகிறது. பாலஸ்தீனத்தின் காஸா முனை ஹமாஸ் அமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கிறது. ஹமாஸ் அமைப்பைப் பயங்கரவாத இயக்கமாக இஸ்ரேல் கருதுகிறது. மேலும் முஹம்மது அப்பாஸ் தலைமையிலான ஆட்சி நடைபெற்றுவரும் மேற்கு கரையின் சில பகுதிகள் இஸ்ரேலின் கட்டுப்பாட்டில் இருக்கின்றன. இந்தப் பகுதிகளில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினருக்கும். பாலஸ்தீனிய ஆயுதக் குழுக்களுக்குமிடையே மோதல் சம்பவங்கள் அவ்வப்போது நிகழ்வது வழக்கமாக இருந்துவந்தது.

இந்த நிலையில். தற்போது இஸ்ரேல்–பாலஸ்தீனம் இடையே மோதல் உச்சமடைந்திருக்கிறது. சனிக்கிழமை காலை 6:30 மணி முதல் பாலஸ்தீனத்தின் காஸாவிலிருந்து ஹமாஸ் குழு இஸ்ரேல் மீது ராக்கெட் தாக்குதல் நடத்தியது. அதனால். இஸ்ரேல் ஸ்டேட் ஆஃப் வார்' என அறிவித்திருக்கிறது. ஹமாஸ் குழுவினர் இஸ்ரேலில் ஊடுருவி துப்பாக்கிச்சூடு நடத்துவதாகவும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. ஏறத்தாழ 22 இடங்களில் இஸ்ரேலிய பாதுகாப்புப் படைகளுக்கும் நூற்றுக்கணக்கான ஹமாஸ் குழுப் போராளிகளுக்கும் இடையே துப்பாக்கிச் சண்டை மூண்ட நிலையில். 300–க்கும் மேற்பட்டோர் இஸ்ரேலிலும். 230–க்கும் மேற்பட்டோர் பாலஸ்தீனத்திலும் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற அதிர்ச்சித் தகவல் வெளியாகியிருக்கிறது.

இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் Yoav Gallant. "இஸ்ரேல் மீது ஹமாஸ் குழு வான்வழி தாக்குதல் நடத்தியிருக்கிறது. இன்று. தீமையின் முகத்தைப் பார்த்தோம். ஹமாஸ் குழு பெண்கள். குழந்தைகள். முதியவர்கள் என்று பாகுபாடின்றி தாக்குதலைத் தொடுத்தது. அது மாபெரும் தவறு என்பதை மிக விரைவில் உணரும். காஸாவில் உள்ள ஹமாஸ் கோட்டைகளை இடித்து தரைமட்டமாக்குவோம்" என சபதமேற்றிருக்கிறார்.

## சீரற்ற வானிலையால் 70.000 இற்கும் மேற்பட்டோர் பாதிப்பு

சீரற்ற வானிலையால் நாட்டின் பல மாவட்டங்களில் 18.898 குடும்பங்களைச் சேர்ந்த 71.320 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. இரத்தினபுரி. கேகாலை. கொழும்பு. களுத்துறை. கம்பஹா. மாத்தறை. காலி. நுவரெலியா. புத்தளம். குருநாகல். யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்கள் மழையினால் பாதிக்கப்பட்டுள்ளதாக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட 555 குடும்பங்களைச் சேர்ந்த 1.910 பேர் 16 பாதுகாப்பான இடங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேலும். அனர்த்தம் காரணமாக 12 வீடுகள் முழுமையாகவும். 1.004 வீடுகள் பகுதியளவிலும் சேதமடைந்துள்ளன. இதேவேளை. காலி. மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களுக்கு மண்சரிவு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்த அறிவிப்பு இன்று பிற்பகல் 3 மணி வரை அமுலில் இருக்கும் என்றும் சிவப்பு அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ள மாவட்டங்களில் பல பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் அந்த நிறுவனம் அறிவுறுத்தியுள்ளது.

காலி மாவட்டத்தின் எல்பிட்டிய. நாகொடை. யக்கலமுல்ல. கடவத சதர. இமதுவடன் களுத்துறை மாவட்டத்தின் இங்கிரிய. வலல்லாவிட்ட. மத்துகம மற்றும் மாத்தறை மாவட்டத்தின் பிட்டபெத்தர. அக்குரஸ்ஸ. ஹக்மன ஆகிய பிரதேசங்களுக்கு மண்சரிவு சிவப்பு அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளதாக தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது. இதேவேளை. மோசமான வானிலையை கருத்தில் கொண்டு காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் உள்ள அனைத்து அரச பாடசாலைகளை இன்றும் (09) நாளையும் (10) மூடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## அவுஸ்திரேலியாவை வீழ்த்திய இந்திய அணி



2023 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரில் அவுஸ்திரேலியா அணிக்கு எதிரான நேற்றைய போட்டியில் இந்திய அணி 6 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது.

சென்னை சேப்பாக்கம் மைதானத்தில் இடம்பெற்ற இந்த போட்டியில் நாணய சுழற்சியில் அவுஸ்திரேலியா அணி வெற்றி பெற்ற நிலையில், அவுஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்துள்ளது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா அணி 49.3 ஓவர்கள் நிறைவில் அனைத்து விக்கெட்டுக்களை இழந்து 199 ஓட்டங்களை பெற்றது. துடுப்பாட்டத்தில் அவுஸ்திரேலியா அணி சார்பில் Steven Smith 46 ஓட்டங்களையும் David Warner 41 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் R Jadeja 3 விக்கெட்டுக்களையும் Jasprit Bumrah 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார்கள்.

இதற்கமைய 200 ஓட்டங்கள் வெற்றி இலக்காக நோக்கி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 41.2 ஓவர்களில் 4 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 201 ஓட்டங்களை பெற்று வெற்றியை தழுவியது.

இந்திய அணி சார்பில் அதிரடியாக ஆடிய KL Rahul 97 ஓட்டங்களையும் V Kohli 85 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் அவுஸ்திரேலியா அணி சார்பில் Josh Hazlewood 3 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

## நடிகர் ஜெக்சன் அந்தனி காலமானார்



வாகன விபத்தில் சிக்கி 14 மாதங்களாக கொழும்பு தேசிய வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நடிகர் ஜெக்சன் அந்தனி இன்று (09) அதிகாலை காலமானதாக குடும்ப உறவினர்கள் தெரிவித்தனர்.

ஜெக்சன் அண்டனி ஜுலை 8, 1958 இல் ராகமவில் பிறந்தார். இறக்கும் போது அவருக்கு வயது 65. நிகழ்ச்சி ஒன்றின் படப்பிடிப்பிற்காக அனுராதபுரம் சென்றிருந்த நிலையில், மீண்டும் திரும்பிக் கொண்டிருந்த போது தலாவ வீதியில் மொரகொட பிரதேசத்தில் அவர் பயணித்த கெப் வண்டி யானை மீது மோதியதில் விபத்து ஏற்பட்டது.

விபத்தில் படுகாயமடைந்த ஜெக்சன் அண்டனி மேலதிக சிகிச்சைக்காக கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். சுமார் 14 மாதங்களாக அங்கு சிகிச்சை பெற்று வந்த ஜெக்சன் அண்டனி இன்று அதிகாலை உயிரிழந்ததாக குடும்பத்தினரின் உறவினர்கள் தெரிவித்தனர்.

நடிகர், பாடலாசிரியர், பாடகர், எழுத்தாளர், அறிவிப்பாளர் என தனது திறமையை வெளிப்படுத்திய அவர் இந்நாட்டின் சிறந்த பத்திரிகையாளராகக் கருதப்படுகிறார். நாட்டின் கலாச்சாரத்தை சர்வதேச சமூகத்திற்கு எடுத்துச் சென்ற அவர், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சி தயாரிப்பாளராகவும் தனது திறமைகளை வெளிப்படுத்தியுள்ளார்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல விருதுகளை பெற்ற ஜெக்சன் அண்டனி, தனது அனுபவத்தை வருங்கால சந்ததியினருக்கு எடுத்துச் செல்ல மிகப்பெரிய பங்காற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெக்சன் அண்டனியின் மறைவு இந்நாட்டின் கலைத்துறைக்கு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும்.

## ஆப்கான் நிலநடுக்கத்தால் 2.000க்கும் மேற்பட்டோர் பலி



ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் 2,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளதாக ஆப்கானிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். அதிக சேதத்தை சந்தித்த ஹெராத் நகரில் தொடர்ந்து மீட்பு பணிகள் இடம்பெற்று வருகிறது. மேற்கு ஆப்கானிஸ்தானில் 6.3 ரிக்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டது.

வீடுகள் உட்பட பல கட்டிடங்கள் இடிந்துள்ளதுடன், இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கம் இதுவெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இன்னும் ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கியுள்ளதாக ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இதனால் பலி எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது அப்பகுதியில் மீட்புப் பணிகள் இடம்பெற்று வருகின்ற போதிலும், நாட்டில் அனைத்து தகவல் தொடர்பு நடவடிக்கைகளும் முடங்கியுள்ளதாகவும், நெடுஞ்சாலைகளும் தடைப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன. இந்த நிலை காரணமாக மீட்பு பணிகளும் தாமதமாகி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலநடுக்கத்தின் மையம் ஹெராட்டில் இருந்து வடமேற்கே 40 கிலோ மீற்றர் தொலைவில் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் அறிவித்துள்ளது. அப்பகுதியில் மேலும் இரண்டு அதிர்வுகள் ஏற்பட்டதாகவும் அந்த மையம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## தென்கிழக்கு பல்கலையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு



தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற Diploma in Counseling, Diploma in English ஆகிய பாடநெறிகளை 2017/2018 மற்றும் 2018/2019 ஆகிய கல்வியாண்டுகளில் கற்று தேர்ச்சிபெற்ற மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு 2023.10.08 ஆம் திகதி தென்கிழக்கு பல்கலைக்கழக பிரதான கூட்ட மண்டபத்தில் இடம்பெற்றது.

தென்கிழக்கு பல்கலைக்கழக வெளிவாரி கற்கைகள் நிலையத்தின் ஏற்பாட்டில் பிரதி பதிவாளர் எஸ்.சிவக்குமாரின் வழிகாட்டலில் குறித்த நிலையத்தின் பதில் பணிப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம்.முஸ்தபாவின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றியதுடன் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

நிகழ்வில் பதில் பதிவாளர் எம்.ஐ.நௌபர், கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாஸில் மற்றும் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி சபீனா எம்.ஜி.எச் ஆகியோரும் நூலகர் எம்.எம்.றிபாவுதீன், பதில் நிதியாளர் சி.எம். வன்னியாராச்சி மற்றும் பேராசிரியர்கள், சிரேஷ்ட விரிவுரையாளர்கள், கல்விசாரா உத்தியோகத்தர்கள், பெற்றோர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

(நூருல் ஹுதா உமர்)

## தனியார் பேருந்து உரிமையாளர்களின் தீர்மானம்



அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் அனைத்து தனியார் பேருந்துகளும் புகை சோதனையில் இருந்து விலகவுள்ளதாக இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் தெரிவித்துள்ளனர். புகைப் பரிசோதனைக்கான நடைமுறை வேலைத்திட்டம் இல்லாத நிலையிலேயே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாகவும், இது தொடர்பில் போக்குவரத்து அதிகாரிகளுக்கு எழுத்து மூலம் அறிவிக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அதன் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் மேலும் கருத்து தெரிவித்த அவர், "குறிப்பாக தற்போது இந்த புகைப் பரிசோதனைக்கு கடும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அதனால் சங்கமாக முடிவெடுத்துள்ளோம் புகைப் பரிசோதனை நடைமுறையை ஜனவரி முதல் கைவிடுவதற்கு. குறிப்பாக எரிபொருளின் தரம் தொடர்பில் சிக்கல் உள்ளது. சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவேண்டும் எனப் பேசப்பட்டு வருகிறது என்ற போதிலும் டீசலின் தரத்தில் கடும் சிக்கல் உள்ளது. இன்னொன்று இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பேருந்துகளுக்கு புகைப் பரிசோதனை செய்யப்படுவதில்லை. அரசுவாகனங்களுக்கும் புகைப்பரிசோதனை இல்லை. எனினும் தனியார் பேருந்துகளும் ஒரே சேவையை வழங்குகிறார்கள். ஒரே கட்டணமே வசூலிக்கப்படுகிறது. எனவே, வரும் ஜனவரி மாதம் முதல் எங்கள் பேருந்துகளை புகைப் பரிசோதனையில் இருந்து நீக்குமாறு போக்குவரத்து அமைச்சகத்துக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிக்க உள்ளோம்" என்றார்.